கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

இரண்டாம் வருட/இரண்டாம் அரையாண்டு பொதுக் கலைமாணித் தேர்வு – 2016/2017 (நவம்பர்/டிசெம்பர் 2019)

# FA 2213 Appreciation of Local Art Traditions

நேரம் : 03 மணித்தியாலங்கள்

முதலாம் பகுதியில் இருந்து இரு வினாக்களுக்கும் இரண்டாம் பகுதியில் இருந்து மூன்று வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி – I

01. (அ) 'உள்ளூர் கலை' என்றால் என்ன என்பதை வரையறை செய்க. (07 புள்ளிகள்)

(ஆ) உள்ளூர்க்கலை உருவாக்கத்தில் பாரம்பரிய சிந்தனைகள் பெறும் முக்கியத்துவத்தை விளக்குக. (07 புள்ளிகள்)

02. (அ) 'பேண்தகு அபிவிருத்தி' என்ற எண்ணக்கருவை எவ்வாறு பிரயோகிக்கலாம் என்பதனை விளக்குக. (07 புள்ளிகள்)

(ஆ) உள்ளூர்க் கலைகளின் உருவாக்கத்தின்போது பேண்தகு அபிவிருத்தி தொடர்பாக கவனம் செலுத்த வேண்டிய அம்சங்களை விளக்குக. (07 புள்ளிகள்)

03. (அ) "கலைப்படைப்பாக்கம் ஒன்றின் போது முகாமைத்துவம் பற்றிய அறிவு உள்ளூர் கலைஞர்களுக்கு அவசியம்" மேற்படி கூற்றின் பொருத்தப்பாட்டினை பரிசீலனை செய்க. (07 புள்ளிகள்)

(ஆ) விளிம்பு நிலை மக்களின் வாழ்வியலில், பாரம்பரியக் கலைகள் பெறும் இடத்தினை மதிப்பிடுக. (07 புள்ளிகள்)

## பகுதி – II

04. உள்ளூர்க்கலை பாரம்பரியத்தில், பல்தேசிய நிறுவனங்கள் செல்வாக்குச் செலுத்தும் விதத்தினை விபரிக்குக. (24 புள்ளிகள்)

05. உள்ளூர் உற்பத்தியில் மட்பாண்டக் கைத்தொழில் அல்லது பிரம்புக் கைத்தொழிலின் இன்றைய நிலை தொடர்பாக கருத்துரைக்குக. (24 புள்ளிகள்)

06. பின்வரும் பாரம்பரிய நிகழ்த்துகைகள் மூன்றினை விபரிக்குக.
(அ) மகிடிக் கூத்து
(ஆ) பறைமேளக் கூத்து
(இ) பக்கீர் பைத்
(ஈ) களிகம்பாட்டம்
(08x03=24 புள்ளிகள்)

07. "நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் உள்ளூர் கலைகள் முக்கிய இடம் பெறுகின்றன" இக்கூற்றின் பொருத்தப்பாட்டை ஆராய்க. (24 புள்ளிகள்)

*****